பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 6

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 13

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 19

முன்னுரை 25

எதிர்பார்க்கப்படும் மஹ்தீயைக் குறித்து நம்முடைய நிலைப்பாடு 26

1 எதிர்பார்க்கப்படும் மஹ்தீயும் அஹ்லுஸ் ஸுன்னாவின் கொள்கையும் 33

2 நபியவர்களிடமிருந்து மஹ்தீ குறித்த ஹதீஸ்களை அறிவித்த நபித்தோழர்களின் பெயர்கள் 38

3 மஹ்தீ குறித்த ஹதீஸ்களைத் தங்களது நூல்களில் குறிப்பிட்ட இமாம்களின் பெயர்கள் 40

4 மஹ்தீயைக் குறித்து நூலை இயற்றிய அறிஞர்களைப் பற்றிய குறிப்புகள் 42

5 புகாரீ மற்றும் முஸ்லிமில் மஹ்தீயைக் குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் 45

6 புகாரீ, முஸ்லிம் தவிர்த்து பிற நூல்களில் வந்துள்ள மஹ்தீ குறித்த ஹதீஸ்கள் 47

7 மஹ்தீ பற்றிய ஹதீஸ்களை ஆதாரமாக ஏற்றுக்கொண்ட அறிஞர்கள் சிலரும் அவர்களது சில கருத்துக்களும் 51

8 மஹ்தீ குறித்த அறிவிப்புகளை நிராகரித்தவர்களுக்கு, அது குறித்து ஆட்சேபணை எழுப்பியவர்களுக்குப் பதில்கள் 70

9 மஹ்தீ குறித்து முரண்பாடாக வந்துள்ள ஹதீஸ்களும் அதற்கான தக்க பதில்களும் 81

10 நிறைவுரை 84

1

எதிர்பார்க்கப்படும் மஹ்தீயும் அஹ்லுஸ் ஸுன்னாவின்[4] கொள்கையும்

❀

4 அஹ்லுஸ் ஸுன்னத் வல்-ஜமாஅத்: 'அஹ்ல்' (اهل) என்றால் உடையவர்கள் எனப் பொருள். எதை உடையவர்கள் என்பதை அடுத்து வரும் வார்த்தை குறிப்பிடுகிறது. அஸ்ஸுன்னத் எனும் நபிவழியை உடையவர்கள். வாவ் (و) எனும் இடைச்சொல் மேலும், மற்றும் என்ற அர்த்தத்தைத் தருகிறது. அல்ஜமாஅத் என்பது நபி ﷺ அவர்களின் கூட்டத்தை, நபித்தோழர்களைக் குறிப்பிடுகிறது. அதாவது, அஹ்லுஸ் ஸுன்னத் வல்-ஜமாஅத் என்றால் நபிவழியையும் நபியவர்களின் ஜமாஅத்தையும் உடையவர்கள் என்று அர்த்தம். பொதுவாக நபித்தோழர்களைப் பின்பற்றிச் சத்தியத்தின் மீதிருக்கும் கூட்டத்தை இது குறிக்கும். அவர்கள் எங்கிருந்தாலும், எக்காலத்தில் வாழ்ந்தவர்களாக இருந்தாலும் இதில் அடங்குவார்கள். எண்ணிக்கை ஒரு பொருட்டல்ல. இப்னு மஸ்ஊது ﷺ கூறினார்கள்: நிச்சயமாக அல்ஜமாஅத் என்பது சத்தியத்தின் மீதிருப்பதுதான், அதில் நீ ஒருவன் மட்டும் இருந்தாலும் சரியே. (இஃ்திகாத் அஹ்லுஸ் ஸுன்னா லில்லாலிகாயீ, ப: 109) இந்த அல்ஜமாஅத் எனும் வார்த்தை நேர்வழியில் இருப்போரையே குறிப்பிடும் என்பதை நபிமொழியிலும் உறுதியாகிறது. சுவர்க்கம் செல்லும் ஒரு கூட்டம் எதுவென கேட்கப்பட்டபோது, 'அதுதான் அல்ஜமாஅத்' என்று நபி ﷺ அவர்கள் பதிலளித்தார்கள். மற்றோர் அறிவிப்பில், 'நானும் என் தோழர்களும் எதன் மீதுள்ளோமோ அதன்மீது இருப்பவர்கள்' என வந்துள்ளது. இதிலிருந்து அல்ஜமாஅத் என்பது நபித்தோழர்களைப் பின்பற்றுபவர்களையே குறிக்கும் என்று தெளிவாகிறது. நபியவர்களின் இறப்புக்குப் பின், நபித்தோழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே, புதிய புதிய கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டு, அனைத்தையும் இஸ்லாம் என்று பேசிய வழிகெட்ட கூட்டங்கள் உருவானார்கள். அச்சமயம், அவர்களிலிருந்து பிரிந்து நின்று, நபித்தோழர்களின் பாதையில் இஸ்லாமைப் பின்பற்றிய கூட்டத்தாருக்கு இப்பெயர் வழங்கப்பட்டது. வழிகெட்ட கூட்டத்தாரை

2

நபியவர்களிடமிருந்து மஹ்தீ குறித்த ஹதீஸ்களை அறிவித்த நபித்தோழர்களின் பெயர்கள்

மஹ்தீ குறித்த ஹதீஸ்களை நபியவர்களிடமிருந்து இருபத்து ஆறு தோழர்கள் அறிவித்துள்ளார்கள்.

1. உஸ்மான் இப்னு அஃப்ஃபான் ﷺ
2. அலீ இப்னு அபூ தாலிப் ﷺ
3. தல்ஹா இப்னு உபைதுல்லா ﷺ
4. அப்துற்றஹ்மான் இப்னு அவ்ஃப் ﷺ
5. ஹுசைன் இப்னு அலீ ﷺ
6. உம்மு சலமா ﷺ
7. உம்மு ஹபீபா ﷺ
8.. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ﷺ
9. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ
10. அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ
11. அப்துல்லாஹ் இப்னு அம்ரு ﷺ
12. அபூ ஸயீது குத்ரீ ﷺ
13. ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﷺ
14. அபூ ஹுறைறா ﷺ
15. அனஸ் இப்னு மாலிக் ﷺ
16. அம்மார் இப்னு யாஸிர் ﷺ
17. அவ்ஃப் இப்னு மாலிக் ﷺ

4

மஹ்தீயைக் குறித்து நூலை இயற்றிய அறிஞர்களைப் பற்றிய குறிப்புகள்

❀

1. மஹ்தீ பற்றி வந்துள்ள ஹதீஸ்கள் யாவும் முத்தவாத்திரானவை என்று கூறுபவர்களில் மனாகிபு அஷ்ஷாஃபிஈ என்ற நூலின் ஆசிரியர் அபூ அல்ஹுசைன் முஹம்மது இப்னு அல்ஹுசைன் அல்அப்ரீ அல்சிஜ்ஸீயும் ஒருவராவார். (மரணம் ஹி. 363)

وَلاَ مَهْدِيَّ إِلاَّ عِيسَى ابْنُ مَرْيَمَ

'ஈசா இப்னு மர்யமைத் தவிர வேறு மஹ்தீ இல்லை' (அறிவிப்பு: அனஸ் ؓ, முஸ்தத்ரக் அல்ஹாகிம் 8363, லாஃபுல் ஜாமிஉ 6348)

என்ற ஹதீஸின் அறிவிப்புத் தொடரில் வரும் முஹம்மது இப்னு காலிது அல்ஜுன்தீ என்பவர் ஹதீஸ்துறை வல்லுநர்களிடையே அறிமுகம் இல்லாதவர் என்கிறார் இவர். ஆனால், மஹ்தீயைக் குறித்து நிறைய செய்திகள் முத்தவாத்திராக வந்துள்ளன. அவற்றில் சில இதோ:

- *அவர் அஹ்ல பைத் எனப்படும் நபியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.*
- *அவர் ஏழு வருடங்கள் ஆட்சி செய்வார்.*
- *அவர் பூமியை நீதத்தால் நிரப்புவார்.*
- *அவர் ஈசா உடன் சேர்ந்து தஜ்ஜாலைக் கொல்வதில் துணையாக இருப்பார்.*
- *அவர் இந்தச் சமுதாயத்திற்கு இமாமத் செய்யும்போது அவருக்குப் பின் நின்று ஈசா தொழுவார்.*

இத்தகவல்களை இப்னுல் கய்யிம் ؒ தமது அல்மனாருல் முனீஃப் என்ற நூலிலும், இப்னு ஹஜர் ؒ அவர்கள் தமது தஹ்தீப் அல் தஹ்தீப் என்ற நூல் மற்றும் ஃபத்ஹுல் பாரீ என்ற நூலிலும், இமாம்

6

புகாரீ, முஸ்லிம் தவிர்த்து பிற நூல்களில் வந்துள்ள மஹ்தீ குறித்த ஹதீஸ்கள்

❀

நபியவர்கள் கூறியதாக அபூ ஸயீது குத்ரீ ﷺ அறிவிக்கிறார்:

أُبَشِّرُكُمْ بِالْمَهْدِيِّ يُبْعَثُ فِي أُمَّتِي عَلَى اخْتِلاَفٍ مِنَ النَّاسِ وَزَلاَزِلَ، فَيَمْلأُ الأَرْضَ قِسْطًا وَعَدْلاً كَمَا مُلِئَتْ ظُلْمًا وَجَوْرًا، يَرْضَى عَنْهُ سَاكِنُ السَّمَاءِ وَسُكَّانُ الأَرْضِ، ويَقْسِمُ الْمَالَ صِحَاحًا قَالَ قُلْنَا وَمَا الصِّحَاحُ ؟ قَالَ بِالسَّوِيَّةِ بَيْنَ النَّاسِ وَيَمْلأُ اللَّهُ, عَزَّ وَجَلَّ, قُلُوبَ أُمَّةِ مُحَمَّدٍ صَلَّى الله عَلَيه وسَلَّم غَنَاءً وَيَسَعُهُمْ عَدْلُهُ

‘நான் உங்களுக்கு மஹ்தீயைக் கொண்டு நற்செய்தி கூறுகிறேன். அவர் பல்வேறுபட்ட மக்களிடையே தோன்றுவார். இந்தப் பூமியை நீதி மற்றும் நியாயத்தால் நிரப்புவார், இதற்கு முன்னர் அது அநியாயம் மற்றும் அக்கிரமத்தால் எப்படி நிரம்பியிருந்ததோ அதைப்போல. பூமியில் உள்ளவர்களும் வானத்தில் உள்ளவர்களும் அவரை ஏற்றுக்கொள்வார்கள். அவர் செல்வங்களை முறையாகப் பங்கிடுவார். முஹம்மதுடைய சமூகத்தின் உள்ளங்களை அல்லாஹ் தன்னிறைவால் நிரப்பிவிடுவான். அவருடைய நீதி அவர்களிடையே பரவிவிடும்.’ (முஸ்னது அஹ்மது 11326, ளயீஃபா 1588)

நபியவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ﷺ கூறுகிறார்:

يَكُونُ فِي أُمَّتِي الْمَهْدِيُّ

‘எனது சமூகத்தில் மஹ்தீ தோன்றுவார்.’ (தப்ரானீ 5406, ஸஹீஹ் இப்னு மாஜா 4073)

நபியவர்களிடம் செவியுற்றதாக ஜாபிர் இப்னு சமுரா கூறுகிறார்:

لَا يَزَالُ هَذَا الدِّينُ قَائِمًا حَتَّى يَكُونَ عَلَيْكُمُ اثْنَا عَشَرَ خَلِيفَةً

8

மஹ்தீ குறித்த அறிவிப்புகளை நிராகரித்தவர்களுக்கு, அது குறித்து ஆட்சேபணை எழுப்பியவர்களுக்குப் பதில்கள்

❀

- 'நீங்கள் ஏன் 'மஹ்தீ வருகை தருவார்' என்பதை வலியுறுத்தும் கருத்துகளை மட்டும் அதிகமாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்?'
- 'மஹ்தீயின் வருகையை நிராகரித்த அல்லது அதில் ஆட்சேபணைகளை எழுப்பிய ஒருவரின் கருத்தைக்கூட ஏன் குறிப்பிடவில்லை?'

இப்படிச் சிலர் கேள்வி எழுப்பக்கூடும்.

முதல் கேள்விக்கான பதில்:

ஆம். நான் மஹ்தீயின் வருகையை வலியுறுத்தும் கருத்துகளைத் தான் அதிகமாகக் குறிப்பிட்டுள்ளேன். இதற்குக் காரணம் அவ்விசயத்தில் உறுதியான நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்பதே. இதுதான் மிகச் சிறந்த அறிஞர்களின் கருத்து. நபியவர்களிடமிருந்து 'ஸஹீஹ்' என்று நிரூபிக்கப்பட்டவை விவாதத்திற்கு உரியவை அல்ல. ஏனெனில், அது அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள வஹ்யி[9] ஆகும். மறைவான விசயங்களில் ஒன்றாகும்.

---

9 மொழி வழக்கில் வஹ்யி (وحي) என்றால் இரகசியமான தகவல் பரிமாற்றம், வெளிப்பாடு எனப் பொருள்படும். இஸ்லாமிய வழக்கில் இதன் பொருள், அல்லாஹ் தன்னுடைய தூதர்களில் ஒருவருக்கு தன் வார்த்தைகளை அறிவித்து வழிகாட்டும் முறை என்பதாகும். இமாம் இப்னுல் கய்யிம் ﷺ இதனை ஏழு வகைப்படுத்துகிறார்கள். 1. உண்மையான கனவு, 2. வானவர், நபி ﷺ அவர்களின் கண்முன் தோன்றாமல் உள்ளத்தில் செய்தியைப் போடுவது, 3. வானவர், ஓர் ஆண் உருவத்தில் தோன்றி நபியவர்களிடம் பேசுவது, 4. வானவர் மணியோசையைப் போன்று வருவது, 5. வானவர் தம் சுய உருவத்தில் தோன்றி

9

மஹ்தீ குறித்து முரண்பாடாக வந்துள்ள ஹதீஸ்களும் அதற்கான தக்க பதில்களும்

❀

وَلاَ مَهْدِيَّ إِلاَّ عِيسَى ابْنُ مَرْيَمَ

'ஈசா இப்னு மர்யமைத் தவிர வேறு மஹ்தீ இல்லை' (அறிவிப்பு: அனஸ் ؓ, மூஸ்தத்ரக் அல்ஹாகிம் 8363, லஃபுல் ஜாமிஉ 6348)

என்ற ஹதீஸ் மஹ்தீ வருவார் என்று வந்துள்ள ஹதீஸ்களுக்கு முரணான ஒன்றல்ல. ஏனெனில், இந்த ஹதீஸ் 'பாவமற்ற, பரிபூரணமான மஹ்தீ, ஈசாவைத் தவிர வேறு யாரும் இல்லை' என்று பொருளில்தான் கூறப்பட்டுள்ளது. எனவே, இங்கு முரண்பாடு என்பது வரவில்லை.

மஹ்தீ இந்த மார்க்கத்திற்கு உதவி செய்வார் என்பதும், இப் பூமியை நீதியால் நிரப்புவார் என்பதும் இன்னொரு பக்கம் தஜ்ஜா லும் அவனது படைகளும் முஸ்லிம்களுக்கு விரோதமாக செயல் பாடுவார்கள் என்பதும் முரணான ஒன்றல்ல. அவ்வாறே நல்லோர் களுடன் தீயோர் கலந்திருப்பதும், அப்போது தென்றல் காற்று வீசி, இறைநம்பிக்கை கொண்ட ஆண், பெண்களின் உயிரை கைப்பற்றிச் செல்லும் என்பதும், பிறகு அங்கு தீயோர்கள் மட்டுமே இருக்கும் நிலையில் மறுமைநாள் ஏற்படும் என்பதும் முரணான ஒன்றல்ல. அல்லாஹ்வின் தூதரும், குலஃபாஉ ராஷிதீன்களும் இப்பூமியில் நீதத்தை நிரப்பிக் கொண்டிருக்கையில் மறுபுறம் அவர்களுக்கான விரோதிகளும் அங்கு நிறைந்திருக்கவே செய்தனர்.

قُلْ فَلِلّٰهِ الْحُجَّةُ الْبَالِغَةُ فَلَوْ شَآءَ لَهَدٰىكُمْ اَجْمَعِيْنَ

'நிரப்பமான அத்தாட்சி அல்லாஹ்விடமே உள்ளது; அவன் நாடியிருந்தால் உங்கள் யாவரையும் அவன் நல்வழியில் செலுத்தி யிருப்பான்' என்று நீர் கூறும். (குர்ஆன் 6:149)